அசல் வழக்கு எண். 115/2022
நாள் : 03.03.2026
வா.சா. : 4
பெயர் : நடராஜன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு விவரம் எனக்கு நன்கு தெரியும். வாதி மோகன் என்பவர் பாலகம் அமைத்திருந்தார் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தும்போது கீழே போட்டு சேதப்படுத்திவிட்டனர். அதற்காக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். பாலகம் அமைத்த இடம் வாதிக்கு சொந்தமானது இல்லை என்றால் சரிதான். அது அரசுக்கு சொந்தமான இடம் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். வாதி பாலகம் அமைக்க திருவெண்காடு சுவேதாரண்ய சுவாமி புதன் கோவிலில் எந்த அனுமதியும் வாங்கவில்லை என்றால் சரிதான். அந்த இடம் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. அரசுக்கு சொந்தமானது. பாலகம் அமைக்க யாரிடம் அனுமதி வாங்கவேண்டுமென்று தெரியுமா என்றால் வாதி வாங்கி கொண்டு வந்து கொடுத்தார் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உரிமத்தை பற்றியும் எனக்கு எந்த விவரமும் தெரியாது. வாதி இதற்கு முன்பு அங்கு வேறு எதாவது கடைகள் வைத்து வியாபாரம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. பாலகம் அமைத்த இடத்தில் தேர்முட்டி உள்ளதா என்றால் இல்லை. அந்த இடத்தை தேர்முட்டி என்று சொல்வார்கள். ஆனால் அங்கு தேர் இப்போது நிறுத்துவது இல்லை. வாதி எனக்கு எந்த உறவு முறையும் இல்லை ஊர்காரர். நான் ஒரு முறை திருவெண்காடு பஞ்சாயத்து தலைவராகவும் ஒரு முறை என் மனைவி பஞ்சாயத்து தலைவராகவும் அதற்கு முன்பு நான் ஒன்றிய கவுன்சிலராகவும் இருந்த வகையில் எனக்கு எல்லோரும் நன்கு பழக்கம். நான் பஞ்சாயத்தில் ஒரு பொறுப்பில் இருப்பதால் பாலகம்

அமைக்க உரிமம் வாங்கிய விவரம் எனக்கும் என் மனைவிக்கும் நன்றாக தெரியும். உரிமம் பெற பஞ்சாயத்தில் வைப்பு நிதி செலுத்தியதற்கு நாங்கள் தான் ரசீது கொடுப்போம். வாதி பட்டதாரி ஆனால் என்ன துறை என்று தெரியாது. வாதி எனக்கு அரசாங்கத்திலிருந்து உரிமம் பெற்று கொடுத்தார் அதனடிப்படையில் பாலகம் அமைக்கப்பட்டது. பொதுவாக கோவிலை சுற்றி கடை வைத்திருப்பவர்கள் கோவிலுக்கு வரி செலுத்துவதுண்டு. வாதி ஏதேனும் கோவிலுக்கு வரி செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. வாதி வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ள பொய் வழக்கில் நான் அவருக்கு சாதகமாக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த அரசியல் கட்சியிலும் இல்லை சுயேட்சையாகத்தான் போட்டியிட்டேன். வாதியின் ஆதரவுக்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.